மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அதிகாரிக்குப் பதவி நீட்டிப்பு என்று சொல்லவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மற்ற மாநிலங்களையெல்லாம் அவர் உதாரணத்திற்குச் சொன்னார்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *62 வயது நிறைந்தவர்களுக்கு, வயது வரம்பைத் தளர்த்துவதிலும், பதவி நீட்டிப்புத் தருவதிலும் தவறில்லை என்றுதான் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுச் சொன்னேனே தவிர, மாண்புமிகு உறுப்பினர் அதைச் சரியாகக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன்.*

திரு. துரைமுருகன்: *அதற்கும் நன்றி. அமைச்சருக்கு நன்றி. அதாவது, அந்த அதிகாரிக்குப் பதவி நீட்டிப்புத் தரமாட்டோம் என்று சொன்னார், சட்டமன்றத்தில். அதற்கும் நன்றி. (குறுக்கீடு)*

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயது வரம்பைத் தளர்த்தியிருக்கிறோம் என்று சொன்னார்கள். வயது வரம்பே கிடையாது. 70 வயதானால்கூட அதிலே இருக்கலாம். இந்தியாவிலே, எங்கேயாவது அப்படி இருக்கிறதா? ஒன்று. இரண்டாவது...(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது ஒவ்வொன்றுக்கும் தனித் தனியே வேண்டாம். அவர் சொல்லிவிட்டார்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, முன்பு... (குறுக்கீடு)*

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன்: *ஒரேயொரு விஷயம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உட்காருங்கள், உட்காருங்கள்.*

(எ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *"11–7–2005 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு*

2005 செப்டம்பர் 29] [பேரவைத் தலைவர்]

அவசரச் சட்டம் எண் 2/2005) இப்பேரவை நிராகரிக்கின்றது" என்கின்ற திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்மொழிந்த தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2005) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள். 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2005 செப்டம்பர் 29

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2005) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஏ) தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின், "2005 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு